செய்தி வெளியீடு எண்: 523 நாள் :01.10.2013

செய்தி வெளியீடு

**சிறுபான்மையின மாணவ –மாணவியர்களுக்கான பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகைக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க கால வரம்பு நீட்டிப்பு**

தமிழ்நாட்டில் வாழும் மதவழி சிறுபான்மையின மாணவ – மாணவியர்களுக்கான பள்ளிமேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான புதிய (Fresh) கல்வி உதவித்தொகைக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க மைய அரசால் 10.10.2013 வரை காலவரம்பு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, இதுவரை பள்ளிமேற்படிப்பு மற்றும் தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்காத தகுதிவாய்ந்த சிறுபான்மையின மாணவ–மாணவியர்கள் இந்த அரிய வாய்ப்பை தவறாமல் பயன்படுத்தி www.momascholarship.gov.in என்ற இணையதளத்தில் Online மூலம் விண்ணப்பித்து கல்வி நிலையங்களுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆணையர்**
**சிறுபான்மையினர் நலத்துறை,**
**சென்னை–2**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9